www.StudyGuideIndia.com

**7410**

Register Number

# தமிழ் — இரண்டாம் தாள்

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

ii) முகவுரை, பொருளுரை மற்றும் முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.

I. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** பற்றி இரு பக்கங்களில் கட்டுரை வரைக. 1 × 10 =10

1. நடேசன் காப்பி - வளர்ச்சியும் வீழ்ச்சியும்.
2. 'கறையான் புற்றெடுக்க கருநாகம் குடிவந்தது' இப்பழமொழியைப் 'புதிய பாலம்' கதை கொண்டு ஆய்க.
3. மண்ணாசை - பெயர்ப் பொருத்தத்தைக் கட்டுரை வடிவில் எழுதுக.

II. பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக. 1 × 10 = 10

(*குறிப்பு* : கடிதத்தில் கையொப்பமிடும் இடத்தில் 'X' என்று குறிப்பிடவும். பெயரோ அல்லது முகவரியோ எழுதினால் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.)

4. நீ வசிக்கும் பகுதியில் சுகாதாரக்கேடு குறித்து ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு புகார்க் கடிதம் எழுதுக.
5. நீவிர் வசிக்கும் பகுதியிலிருந்து வெளியூர் சென்று வரப் பேருந்து வசதி அமைத்துத் தர வேண்டி, போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பம் எழுதுக.
6. விடுதியில் தங்கிப் பயிலும் உன் தங்கைக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறி கடிதம் எழுதுக.

III. 7. கீழ்க்காணும் பாடலைப் படித்து பொருளுணர்ந்து பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. 5 × 2 = 10

உழவும் தொழிலும் நமக்கெலாம்
உயிரும் உடலும் போன்றவையாம்
பழகும் கைத்தொழில் ஒவ்வொன்றும்
பாரில் வாழ்ந்திட உதவிடுமே
ஊக்கம் உடையவர் வாழ்க்கையிலே
உயர்வும் நலமும் பெற்றிடுவர்
ஆக்கம் பெருமை எந்நாளும்
அவனைத் தேடி அடைந்திடுமே
அன்பும் அடக்கமும் அறிவோடு
அமைந்திடில் வாழ்க்கை சிறந்திடுமே
துன்பம் போக்கும் மாமருந்து
தூய கல்வி ஒழுக்கமுமே.

*வினாக்கள் :*

i) உடலும் உயிரும் போன்றவை எவை ?

ii) பாரில் வாழ்ந்திட எவை உதவிடும் ?

iii) ஊக்கம் உடையவர்க்கு உண்டாவன யாவை ?

iv) எவற்றால் வாழ்க்கை சிறந்திடும் ?

v) எவை துன்பம் போக்கும் மாமருந்தாகும் ?

[ Turn over

www.StudyGuideIndia.com

IV. 8. கீழ்க்காணும் உரைநடையை *மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி* எழுதுக : 1 × 10 = 10

புலவர்கள் ஏட்டில் வடித்து எல்லையிட்டு எழுதி வைத்தவற்றை மட்டுமே இலக்கியம் எனப் பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆயினும் சற்று நின்று நிதானித்துப் பார்த்தால் எழுதிய இலக்கியங்களைக் காட்டிலும் எழுதாத இலக்கியங்களே எல்லையற்றன என்பது புலனாகும். மனிதன் தான் பேசும் மொழி செம்மை பெறுவதன் முன் ஒரு சில பேசியும் பாடியும் வந்திருப்பான். ஆனால் அவற்றை அறிந்தோர் 'வாய்மொழி இலக்கியம்' எனக் கொள்ளமாட்டார்கள். மரபும் அதுவன்று. செம்மை நலம் பெறாத திருந்தா நிலையில் தோன்றும் எதுவும் இலக்கியமாகாது. வாய்மொழி இலக்கியமாகக் கொள்வது, மொழி செம்மை பெற்றபின் காலத்தால் பிந்திய எழுதும் இலக்கியம் உருப்பெற்ற பின்பு தோன்றியவற்றையே ஆகும்.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

9. பொழுது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? 1 × 2 = 2

*அல்லது*

குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

10. வெட்சி, கரந்தைத் திணைகளை விளக்குக. 1 × 2 = 2

*அல்லது*

பொதுவியல் திணை என்றால் என்ன ?

11. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? 1 × 2 = 2

*அல்லது*

ஆசிரியப்பாவின் வகைகளை குறிப்பிட்டு எழுதுக.

12. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக : 1 × 2 = 2

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்

போற்றாது புத்தே ளுலகு.

13. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் இரண்டனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக : 2 × 2 = 4

i) காப்பார் ii) ஆடினன்

iii) வந்து iv) கண்டோம்.

14. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் இரண்டனுக்கு இலக்கணக் குறிப்பு தருக: 2 × 2 = 4

i) வாழ்க ii) மாநெறி

iii) பெரும்பூமி iv) இரப்பார்.

www.StudyGuideIndia.com

15. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** புணர்ச்சி இலக்கணம் தருக: $2 \times 2 = 4$

i) பாசடை ii) நாட்டுப்பற்று

iii) தென்மேற்கு iv) மரக்கால்.

16. கீழ்க்காணும் இரு வினைமுற்றுகளில் ஏதேனும் **ஒன்றனுக்குத்** தொழிற்பெயர் எழுதுக : $1 \times 2 = 2$

i) மேய்ந்தன ii) குடித்தான்.

17. வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. $1 \times 4 = 4$

*அல்லது*

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புணையைச் சுடும் - இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

18. கீழ்க்காண்பவற்றில் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : $1 \times 2 = 2$

ஔகாரக் குறுக்கம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

*அல்லது*

வியங்கோள் வினைமுற்றை விவரித்து எழுதுக.

19. கீழ்க்காண்பவற்றில் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : $1 \times 2 = 2$

வழாநிலை என்றால் என்ன ?

*அல்லது*

இனமொழி விடை என்றால் என்ன ?

VI. 20. கீழ்க்காணும் உரைநடையைப் படித்துத் தகுந்த நிறுத்தற் குறியிடுக : $1 \times 2 = 2$

தமிழ் இளைஞர்களே பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள் தமிழ் இன்பத்திலும் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ

21. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டனுக்கு** திருந்திய சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) ஒருவள் ii) வென்னீர்

iii) தலகாணி iv) சுவற்றில்.



www.StudyGuideIndia.com

22. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டினைப்** பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

i) குறைவிலை ii) தைத்திங்கள்

iii) சேவடி iv) நிகரற்ற.

23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக : $3 \times 2 = 6$

i) பிஞ்சிலே பளுத்தல்

ii) இணம் இணத்தோடு சேரும்

iii) ஊறுடன் கூடி வாள்

24. கீழ்க்காணும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) ஆஸ்தி ii) சாதம்.

25. கீழ்க்காணும் தொடரைச் செய்தி வாக்கியமாக மாற்றுக : $1 \times 2 = 2$

திருக்குறளைப் போற்றாத நாடும் உளதோ ?

26. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்குக : $1 \times 2 = 2$

தமது மூக்கு கண்ணாடியை கழற்றி துடைத்து விட்டு தூசி போய் விட்டதா என்று அறிவதற்காக ஒளி வரும் வழியில் உயர்த்தி பார்த்தார்.

27. கீழ்க்காணும் தொடரை வினாத்தொடராக மாற்றுக : $1 \times 2 = 2$

அரங்கேற்றம் ஒரு பெரிய திருவிழாவைப் போல நடைபெறும்.

VII. 28. கீழ்க்காணும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்க : $1 \times 4 = 4$

Food is essential for all living things. Without food man cannot live long. Every man has to eat a certain quantity of food. Every man has to eat food to live.

29. கீழ்க்காணும் மரபுத்தொடர்கள் அல்லது பழமொழிகளில் எவையேனும் மூன்றனைத் தமிழில் மொழிபெயர்க்க : $3 \times 2 = 6$

i) Spare the rod and spoil the child

ii) Man proposes, God disposes

iii) Barking dogs seldom bite

iv) Empty vessels make much noise

v) A young calf knows not fear.

www.StudyGuideIndia.com